விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 14 இதழ் 169
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29 07 1992

## தாயகம் திரும்பும் ஈழ அகதிகள் பற்றி ஆராய ஐ. நா. விசாரணைக் குழு

(ஜெனிவா)
தமிழகத்தில் தங்கியிருக்கும் இலங்கை தமிழ் அகதிகள் தன்னிச்சையாக இலங்கை திரும்ப சம்மதித்துள்ளார்களா அல்லது வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பப்படு

(4ம் [illegible])

## யாழ்., திருமலை பகுதிகளில படையினர் மீது தாக்குதல்

(கொழும்பு)
யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி காவலரண்கள் மீது நேற்று விடுதலைப்புலிகள் பலத்த தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தினர் சூட்டுக்கு ஒருவர் பலி; மூவர் காயம்

(மட்டக்களப்பு)
கொக்கட்டிச்சோலை வவுணதிவு இராணுவ முகாம்களிலிருந்து ரெலோவினருடன் இணைந்து வெளியே வந்த இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தமிழர் கொல்லப்பட்டார். மூவர்காயமடைந்த கடந்த 25-ம் திகதி குறிக்கப்பட்ட முகாம்களிலிருந்து

(4-ம் பக்கம் பார்க்க)

# மட்டு. அம்பாறை பகுதிகளில் படை நடவடிக்கைகள் தீவிரம்

# இராணுவ நிலைகள் அதிகரிப்பு

## பெருமளவு படைகள் குவிப்பு

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ள பழுகாமம் அக்கரைப்பற்று பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளதுடன், படையினரின் நிலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

கடந்த 4 நாட்களில் 10க்கு மேற்பட்ட இராணுவ நிலைகள் புதிதாக அமைககப்பட்டு, பெருமளவு இராணுவத்தினர் புதிதாகக் குவிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ நிலைகளில் உள்ள இராணுவத்தினர், அதிகாலை வேளைகளில் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பழுகாமம் பகுதியிலும் தும்பன்கேணியிலும் கடந்த 4 நாட்கள் நடத்திய தேடுதலில் 18 தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். (ரி)

## அதிரடிப்படை முகாம் குருமண்வெளியில் அமைப்பு

(அம்பாறை)
அம்பாறை குருமண்வெளியில விசேட அதிரடிப்படையினரின் பாரிய முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இம்முகாமில் பெருமளவு விசேட அதிரடிப்படையினர். மற்றும் பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர். (ரி)

## அநுரா-சந்திரிகா கோஷ்டி கூட்டத்தில் மோதல்

(கொழும்பு)
சுதந்திரக கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பாராட்டும் கூட்டத்தில் அநுரா கோஷ்டியும், சந்திரிகா கோஷ்டியும் மோதிக்கொண்டன.

(4-ம் பக்கம் பார்க்க)

## எழுதுவினைஞர் பரீட்சை விண்ணப்பத் திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)
எழுதுவினைஞர் பரீட்சைக்குரிய விண்ணப்ப முடிவுத் திகதி அடுத்த மாதம் 14ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பரீட்சாத்திகள், தமது விண்ணப்பங்களை அடுத்த மாதம் 14ம் திகதிக்கு முன்பு, பதிவுத் தபாலில்

(4-ம் பக்கம் பார்க்க)

## 120 போலி பற்சிகிச்சை நிபுணர்கள் அம்பலம்

(கொழும்பு)
தென்பகுதியில சுமார் 120 போலி பற்சிகிச்சை நிபுணர்கள் வைத்திய நிலையங்களை நடாத்தி வருவது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதனல் மக்களுக்கு பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கு எதிராக

(4ம் பக்கம்பார்க்க)

## பரீட்சை முடியும் வரை தாக்குதலை நிறுத்த வேண்டும்

### அரச அதிபர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் அடுத்த மாதம் 1-ம் திகதி ஆரம்பமாகவிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சை முடிவடையும் வரை எதுவித இராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என்று யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஜனதிபதி ஆர். பிரேமதாசாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(4ம் பக்கம் பார்க்க)

## இரு தடவைகள் உணவுக் கப்பல்களை அனுப்ப நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
மாதாந்தம் இரு தடவை யாழ்ப்பாணத்துக்கு உணவுக் கப்பல்களை அனுப்புவதற்கு, அரசு தற்போது அனுமதி வழங்கியுள்ளது

இதன் பிரகாரம் அடுத்த மாதம் 6ம் திகதி குமணக் கப்பலும், 15ம் திகதி குமாரிக்கப்பலும் பருத்தித்துறைக்கு வரவுள்ளது

அடுத்த மாதம் 6ம் திகதி வரவிருக்கும் குமணக் கப்பலில் ஆவணி மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்கள், 2200

(4-ம் பக்கம் பார்க்க)

## கட்டுப்பாட்டு விலையில் மண்ணெண்ணை, தேங்காயெண்ணை யாழ். நகரில் விற்பனை

(யாழ்ப்பாணம்)
யாழ்.நகரில் நேற்று பல இடங்களில் தேங்காய் எண்ணையும், மண்ணெண்ணையும் கட்டுப்பாட்டுவிலைக்கு விற்பனை செய்யப்பட்டது.

தேங்காய் எண்ணை லீற்றர் 65 ரூபாவுக்கும் மண்எண்ணை லீற்றர் 30 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட்டது.

இதேநேரம் திவசப்பகுதி, ப. நோ. கூ. சங்கங்களிலும் நிவாரண அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணை நேற்று வழங்கப்பட்டது. (வி)

## விறுத்தாள்கள் யாழ். வந்தன தொடர்ந்து 3 கட்டமாக கொண்டுவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
க. பொ. த. (உ/த) பரீட்சைக்குரிய விறுத்தாள்கள் மூன்று கட்டமாக யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படும்.

நேற்று காலை யாழ். நக

(4-ம் பக்கம் பார்க்க)

**நீர் இன்றேல் சீர் இல்லை**
**குளம் இன்றேல் வளம் இல்லை**

## அரசு - புலிகள் பேச்சுக்கு முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

(கொழும்பு)
அரசுடன் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

இனப்பிரச்னையைதீர்க்கபுலிகளுடன் அரசு பேச்சுவார்த்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சோபிதா

பாடசாலை உபகரணங்கள், அலுவலக உபகரணங்கள், மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம், 'சோபிதா' 363, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். (ஏ-2207)

### தரன் ஸ்ருடியோ

அவசரமாக, றபர் சீல்கள் பாஸ்போட், அடையாள அட்டைகள் மற்றும் கலர் படங்களுக்கும் விளம்பர போட் எழுதுவதற்கும். தரன் ஸ்ருடியோ, 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6523)

### பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப் படுத்தக்கூடிய KARAWILA Capsules. கிடைக்குமிடம் எஸ்.ரி மெடிக்கஸ் ஆஸ் பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6552)

### புத்தகம்

''நாமம் சொல்லுவோம்'' (நமனை வெல்லுவோம்) விலை ரூபா: 18/- வெளியீடு: நடுவுத்துருத்தி 388/6, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தபாற் செலவு இலவசம் (சி-6590)

### விண்ணப்பப் படிவம்

எழுதுநர் சேவைக்கான படிவம் விற்பனையாகிறது. விலை ரூபா 4/- எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். நாயகபாலன் புத்தகக் களஞ்சியம், மானிப்பாய். (சி- 6597)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலை கால் அவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார் வேலணைவைத்தியர் சி இராசரத்தினம், 121, 2-ம் குறுச்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6561)

### விற்பனைக்கு

தோட்டக்காணி 8 பரப்பு கிணற்றுப்பங்குடன்-அல்வாய் தெற்கில் கிராம சபைக்கு அருகாமையில் தொடர்பு திருமதி ப. சுப்பிரமணியம், அதிபர், அல்வாய் தெற்கு, அல்வாய். (சி 6596)

### இலவச திருமணசேவை

32 வயது, புனர்பூசம், செவ்வாய் 2, கனடா செல்வதற்கு Sponser உள்ள மணப்பெண்ணுக்கு கனடா மணமகன் தேவை. சகல துறைகளிலும் மணமக்கள் உண்டு ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, யாழ்/ நாச்சிமார் கோவிலடி. (சி-6598)

### புலமைப்பரிசில் பரீட்சை (ஆண்டு - 5)

சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரம் தோறும் நடாத்தப்படும் புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 02-08-92 ஞாயிறு மு. ப. 7. 00, மு. ப 11-00 நடைபெறும் புலமைப் பரிசில் Paper Class தூர இட மாணவருக்கு சனி, ஞாயிறு பி. ப 4-00 - பி.ப 6 00 ஆரம்பமாயுள்ளது. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-6609)

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**

---

## வளர்ந்தோர் கல்வி- ஆங்கிலப் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள வளர்ந்தோர் கல்விப் பிரிவினரால் யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடத்தப்பட உள்ள ஆங்கிலப் பயிற்சி நெறி 02-08-1992 பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பமாகும். இப்பயிற்சி நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களும், விண்ணப்பிக்க விரும்புபவர்களும் 01-08-92 பிற்பகல் மூன்று மணிக்கு பாடசாலையில் வந்து பதிவுகளை மேற்கொள்ளவும். வயது எல்லை இல்லை.

அதிபர்

25-07-92

(சி-6607)

---

## 19 வது ஆண்டு விழா

### கண்ணபுரம் சனசமூக நிலையம்

19 வது ஆண்டு விழாவில்

50 மைல் சயிக்கிள் ஓட்டம், 5 மைல் மரதன் ஆகிய போட்டிகள் நடைபெறும்.

தமிழீழ எல்லைக்குள் வசிப்போர் அனைவரும் (ஆண்கள்) விண்ணப்பிக்கலாம்.

பதிவுசெய்யுமிடம்:

**கண்ணபுரம் சனசமூக நிலையம்**

யாழ்ப்பாணம்

பதிவுசெய்யும் கடைசித் திகதி:

5- 8- 1992

நிர்வாகிகள்

(சி-6608)

---

உ

## முக்கிய அறிவித்தல்

ஆனைக்கோட்டை ஸ்ரீ மூத்த நயினார் கோவில் தேர்த் திருத்த வேலைகளுக்கு நிதி சேர்க்கும் அதிகாரம் எந்த ஒரு குழுவுக்கோ, தனிநபருக்கோ தர்ம கர்த்தா சபை அதிகாரம் அளிக்கவில்லை என்பதை தர்மகர்த்தா சபையின் சார்பில் அறியத்தருகிறோம்.

இணை முகாமையாளர்.

(சி-6606)

---

## நெஞ்சங்களும் அத்தியார் நினைவாலயம்

கல்வியே மேலான செல்வமாகுமெனும்
கருத்தினை மனதிற்கொண்டு – தன்
செல்வங்கள் யாவும் ஈந்து
பலகலையும் மக்கள் கற்க – இங்கு
கல்லூரி ஒன்றமைத்துத் தந்த
பெருவள்ளல் அத்தியார் தமக்கு
நல்லோர் நெஞ்சங்கள் யாவுமே
நினைவாலயம் ஆகுமே.

— "நீர்வை இரதி"

★ இன்று (29-07-92) அத்தியார் இந்துக்கல்லூரி ஸ்தாபகர் நினைவாலயத் திறப்புவிழா.

(சி-6601)

---

உ

## புலோலியூர் உபயகதிர்காம ஆலய உற்சவம்

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் முருகன் தான்தோன்றியாக என்றென்றும் நீங்காது நின்று திருவிளையாடல் புரியும் தலம் உபயகதிர்காமம்.

இக் கதிர்காமம் உலகிலேயே தனிப்பெரும் சிறப்பைப் பெற்ற திருத்தலமாகும். வேறெந்த ஆலயங்களிலும் அமைந்திராத முறையில், மூலலிங்கம் சக்கர இயந்திர வடிவுடன் அமைந்துள்ளது. எவராலும் உரையப்படாத வெண்கல்மலையில் தானே அமைந்து காணப்படும் சுயம்புலிங்கத்தைக் கொண்டது.

### உற்சவம் ஆரம்பம:

மதியம் 12-00 மணி 30-07-92
தீர்த்தம் காலை 7-00 மணி 13-08-92
திருஊஞ்சல் மாலை 4-00 மணி 13-08-92

ஆலயத்திற்கு பணம் பொருள் செலுத்த விரும்புவோர் தீர்த்தத்திருவிழா அன்று அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் செலுத்தலாம்

உபயகதிர்காம முருகனிடம் சென்று உற்சவகாலங்களில் கலந்து அருள்பெற்றுய்வோமாக.

நிர்வாகசபை

(சி-6605)

---

உ

சிவமயம்

யாழ்ப்பாணம் திருவண்ணைநகர்

## அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி திருக்கோயில்

## திருத்தேர் வெள்ளோட்ட விழா

### காலம்: 30-07-92 வியாழக்கிழமை

காலை 7-00 மணி

**வைத்தீசுவரப் பெருமான் அடியார்களே!**

நிகழும் ஆங்கீரச ஸு ஆடி மீ 15-ம் நாள் (30-07-92) வியாழக்கிழமை காலை 6-00 மணிக்குத் தொடங்கும் சுபவேளையில் வெள்ளோட்டவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

**ஆசியுரைகள்:**

நல்லை ஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள்

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
(தலைவர், துர்க்கை அம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பளை)

பேராசிரியர் இ. குமாரவடிவேல் அவர்கள்
(தலைவர், வில்லூன்றிப் பிள்ளையார் தேவஸ்தானம்)

**சித்திரத்தேர் நிர்மாணிப்பு:**

திருநெல்வேலி ஸ்ரீவாணன் சிற்பாலயம்
சிற்பக்கலாநிதி விஸ்வப்பிரம்மஸ்ரீ
செ. கந்தசாமி அவர்களும்
அவரது குழுவினர்களும்

ஆலய பரிபாலனசபைத் தலைவர் சைவப்புலவர்
திரு. வ. கந்தசாமி அவர்கள்
சிற்பக்கலாநிதி அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார்கள்.

தேவஸ்தான வித்துவான்களும்
ஈழத்தின் தலைசிறந்த மங்களவாத்திய வித்துவான்கள்
திரு. N. K. பத்மநாதன் குழுவினர்
திரு. கானமூர்த்தி பஞ்சமூர்த்தி குழுவினர்
திரு. S. ரவீந்திரன் குழுவினர்களும்
இவ்விழாவில் கலந்து சிறப்பிப்பார்கள்

அனைவரையும் இந்த மங்களகரமான நிகழ்ச்சியில் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை

அன்பளிப்பு:- திரு. க. தர்மகுலசிங்கம்

(எ-2328)

---

## JAM போத்தல்கள் நியாயமான விலைக்கு கொள்வனவு செய்யப்படும்

**Tasty!**

**Taste Line Industries (pvt) Ltd.**

இல. 14, சீனியர்லேன், யாழ்ப்பாணம்.

(ஏ 2306)

## வளைகுடாவில் மீண்டும் நெருக்கடி:

# ஈராக்கை தாக்கும் தொலைவில் அமெரிக்க யுத்தக்கப்பல்கள் நிறுத்தம்

(பாக்தாத்)

பாரசீக வளைகுடாப் பகுதியில் தனது படைப் பலத்தை அமெரிக்கா அதிகரிக்கவுள்ளது.

மேலும் மூன்ருவதாக அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலான 'ஜோன் கென்னடி' ஈராக் மீது தாக்குதல் நடத்தக்கூடிய தொலைவிற்கு அனுப்பப்பட்டுள்ளது மற்றுமொரு அமெரிக்க விமானந் தாங்கிக கப்பலான 'இன்டிபென்டன்' ஏற்கனவே வளைகுடாப் பகுதியில நிறுத்தப்பட்டுள்ளது,

பாரசீக வளைகுடா போர் நிறுத்தத் தீர்மானங்கள் எந்த விதத்திலும் மீறப்படுவதை வருங்காலத்தில் சகித்துக் கொண்டிருக்க முடியாதென அமெரிக்க அதிபர் திரு. புஷ் எச்சரித்ததையடுத்து மேற்படி படைபல அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஈராக் விவசாய அமைச்சக் கட்டிடத்தினுள் ஐ. நா. ஆய்வாளர்களை அனுமதிப்பதென ஈராக் எடுத்த முடிவு தந்திரமாகப் பின்வாங்குவதற்கு ஒப்பாகுமென அதிபர் புஷ் கூறியுள்ளார் எனினும் இதனை ஈராக்கிற்குக் கிடைத்த வெற்றியென அந் நாட்டில் கூறப்படுகிறது.

பாக்தாத்திலுள்ள விவசாய அமைச்சகக் கட்டிடத்தினுள் ஐ. நா. ஆயுதங்கள் ஆய்வாளர் குழு நேற்று நுழைய விருந்தது. ஈராக்கிற்கும்-ஐ. நா. விற்கும் இடையில் எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் வளைகுடாப் போரில் ஈராக்கிற்கு எதிராக போரிடாத ஐரோப்பிய நாடுகளின் உறுப்பினர்கள் இப்புதிய குழுவில் இடம்பெறுவார்கள்.

முன்னதாக கட்டிடத்தினுள் நுழைய முயற்சித்த குழுவிலிருநது தற்போது இரு அமெரிக்கர்கள் நீக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே நூற்றிமுப்பது அமெரிக்க யுத்த விமானங்கள் சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டதும், வேறு பல யுகத விமானங்கள் குவைத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (சி)

## இன்று

[பருத்தித்துறை]

தென் புலோலி முருகையா கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் 37.வது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் இறுன் 29-ம் திகதி நிலையத்தலைவர் திரு.எஸ். தெய்வேந்திரம் தலைமையில் நடைபெறுகின்றது. (52)

## அரசாங்கத்தை கவிழ்க்க ஒரு சிறு குழு முயற்சி

### ஜனாதிபதி பிரேமா

(கொழும்பு)

அரசாங்கத்தை கவிழ்க்கும் முயற்சியில் பாதயாத்திரைகளையும் எதிர்ப்பியக்கங்களையும் நடாத்தி வருவதாக ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.

கலகெதர என்னுமிடத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் இவ்வாறு கூறிய அவர், அங்கு தொடர்ந்து பேசுகையில்;

பதவி மோகமும், பொருமையும் கொண்ட ஒரு குழுவே இவ்வாருன முயற்சிகளில் ஈடுபட்டுவருகிறது சுயநலம் கொண்ட இக்குழுவை கண்டு அரசு கோபமடையவுமில்லை, மனத்தளர்ச்சியடையவுமில்லை என்றும் கூறினர்.

கோடிக் கணக்கான ரூபாவை விழுங்கும் வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்கு வருமானல் இந்த நாட்டிலிருந்து வறுமையை விரட்டிவிடலாமென்ருர். (சி)

## நியாய விலையில் பொருட்கள் விநியோகம்

(மானிப்பாய்)

சங்கானை காவல்துறையினர் முகாம்களில் தங்கியுள்ள இடம் பெயர்ந்த மக்களுக்கு சவர்க்காரம் மண்ணெண்ணை, தேங்காய்எண்ணை, தீப்பெட்டி என்பனவற்றை நியாய விலையில் தற்போது வழங்கி வருகின்றனர்

அண்மையில் இவர்கள், சங்கானை, பண்டத்தரிப்பு, மூளாய், சுழிபுரம் ஆகிய பகுதிகளில் கைப்பற்றப்பட்ட மேற்படி பதுக்கல் பொருட்களை பண்டத்தரிப்பு பற்றிமா கோயில் முகாம் ஆகியவற்றில் தங்கியுள்ளவர்களுக்கு குடும்பத்துக்கு 2 சவர்க்காரம். 2 தீப்பெட்டி, கால் போ-தேங்காய்யெண்ணை, கால் போ. மண்ணெண்ணை என்ற அடிப்படையில் வழங்கி வருகின்றனர். [71]

## மரக்கறி விற்பனை நிலையம்

(நெல்லியடி)

நெல்லியடி மத்திய சந்தையின் உட்புறத்தில் மரக்கறி விற்பனை நிலையமொன்றை கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். ஜெகநாதன் திறந்து வைத்தார். [160]

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்]

வண்ணை அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்கவைத்தீஸ்வரசுவாமி கோவில் 'சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா' நாளை வியாழக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நல்லை ஆதீன 2வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, பேராசிரியர் இ குமாரவடிவேல் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (சி)

## விளையாட்டு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்துக்குப் புதிய விளையாட்டு அதிகாரியாக கிளிநொச்சியில் கடமையாற்றிய திரு எஸ். கனகராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அதிகாரியாக திரு. திரு. எஸ். துரைசிங்கம் நியமிககப்பட்டுள்ளார். [வி]

## இராசி பலன்

**29-07-1992**

**புதன்கிழமை**

**(தமிழுக்கு ஆடி 14)**

அமாவாசை பி. இ. 1.49 வரை; புனர்பூசம் மு. ப. 9.45 வரை இராகுகாலம் பகல் 12.04 முதல் 1.33 வரை சுபநேரம் மாலை 4.33 முதல் 6.03 வரை ஆடி அமாவாசை விரதம்.

மேடம்:- உறவினர் மனத்தாங்கல், நம்பிஏமாறல். செலவு.

இடபம்:- அகால உணவு, பணக்கஸ்டம், அலைச்சல்.

மிதுனம்:- வீணனகுழப்பம், தாய்வழிஉறவு, தனவிரயம்.

கடகம்:- இன்பகரமான மன நிலை, குடும்ப சிறப்பு, காரியவெற்றி

சிங்கம்: அதிகாரிகள் சினம். வாக்குபகை, பயனற்ற செயல்

கன்னி:- சுபச்செய்தி. நண்பருதவி, காரியம் கைகூடல்.

துலாம்:- நல்லமதிப்பு, சுற்றத்தார் உதவி, தொழில் சிறப்பு

விருச்சிகம்:-மனத்தளர்ச்சி, கட்டுப்படுதல், இடைஞ்சல்

தனுசு:- முயற்சி தோல்வி, மனக்கவலை, வாக்குவாதம்

மகரம்:- பணவரவு, நற்பெயர், திருமணபேச்சு

கும்பம்:- கடித அனுகூலம், கடன்வரவு. புதியநட்பு

மீனம்: இனம்புரியாத பயம், அஜீரணகுறைவு, குழப்பம்

— ஜோஸ்யர்

# சுவிஸில் தஞ்சம் கோரி 20,000 இலங்கையர் விண்ணபபம்

(சூரிச்)

சுவிற்ஸர்லாந்தில் இருபதினயிரம் இலங்கையர்கள் அரசியல் தஞ்சம்கோரி விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் அதிகமானேர் தமிழர்கள் என்று தெரிவிக்சப்படுகிறது.

இவர்களில் நாலாயிரம் பேர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனையிலிருப்பதாகக் கூறப்படுகிறது.

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தினல் இடம்பெயர்ந்தவர்களே இவ்வாறு அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

அரசியல் தஞ்சம் கோரியவர்களில் டலர் பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தது கண்டுபிடிக்கப்பட்டு அவர்களின் விண்ணப்பங்கள் உடனடியாக நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. [மா)

## உள்ளூராட்சி சேவையின் சில பகுதிகள் ஒன்றிணைப்பு

(கொழும்பு)

பொதுநிர்வாக சேவையின் கீழ் உள்ளூராட்சி சேவைகளின் சில பகுதிகள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் உள்ளூராட்சி நிர்வாகசேவை, உள்ளூராட்சி கணக்காளர்சேவை, உள்ளூராட்சி பொறியியலாளர் சேவை, உள்ளூராட்சி மருத்துவ சேவை, ஆகிய நான்குமே பொதுநிர்வாக சபையின்கீழ் வருகின்றன.

இந்த ஒருங்கிணைப்பு மார்ச் மாதம் 4ம் திகதி முதல்நடைமுறைக்கு வத்துள்ளதென்றும் எந்தவிதத்திலும்சம்பளத்தில், சம்பள உயர்ச்சியில் மாறுபாடு இல்லையென்றும் பொதுநிர்வாக சேவைச் சுற்றறிக்கை 20192ல் மேலும் தெரிவிக்கப்படுள்ளது. (சு)

## இரண்டு தமிழர் பலி

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பிலுள்ள புலிபாய்ந்த கல் என்ற இடத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு தமிழர்கள் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு]

## கலையரசு நூற்றுண்டு விழா

[மானிப்பாய்]

கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியினர் யாழ். கலவித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்திய கலையரசு சொர்ணலிங்கத்தின் நூற்ருண்டுவிழா நேற்று முன்தினம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

திரு ஆ கல்யாணசுந்தரேசன் தலைமையில் கல்லூரி வாகீசர் மண்டபத்தில் இவ் விழா நடைபெற்றது. [71]

## விளையாட்டு உத்தியோகஸ்தர் பரீட்சை வடக்கிலிருந்து தோற்றிய எவரும் சித்தியடையவில்லை

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் விளையாட்டு உத்தியோகஸ்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, அண்மையில் கொழும்பில் நடைபெறற எழுத்துப் பரீட்சையில் வடபகுதியைச் சேர்ந்த எவரும் சித்திபெறவில்லையென தற்போது வெளியான பரீட்சை முடிவுகள் தெரிவிக்கின்றன.

மேற்படி மாகாணங்களில், நீண்டகாலமாக நிரப்பப்படாமல் இருந்த 24 வெற்றிடங்களுக்காக நடைபெற்ற பரீட்சையில 42 பேர் சித்திபெற்ற போதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் 24 பேர் தெரிவுசெய்யப்படடுள்ளார்கள்.

## மடுத்திருப்பதியில் ஆவணி திருவிழா

(மன்னர்]

மருதமடு திருப்பதியில் ஆவணித் திருவிழா எதிர்வரும் 6ந் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி காலையில் திருப்பலிகளும் மாலையில் செபமாலை-நற்கருணை ஆசீர்வாதம் ஆகியன இடம்பெறும். (59)

## நிவாரண அட்டைகள் புதுப்பிக்கும்வேலை ஆரம்பம்

(காங்கேசன்துறை)

இடம் பெயர்ந்தவர்களுக்கான 'இ' அட்டைகளை புதுப்பிக்கும் வேலைகள் வலி.வடக்கில் கிராமசேவை அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி. வடக்கிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்ட 'இ' அட்டைகள் நிவாரணம் வழங்கப்பட்ட விபரங்களை பதிவுசெய்து பூர்த்தியடைந்துவிட்டதால் அவற்றைப் புதுப்பித்து மீண்டும வழங்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமசேவை அலுவலர்களை அணுகிஇரண்டுருபா செலுத்தி மேற்படி அட்டைகளை புதுப்பித்துக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (86)

## யங்ஹென்றீஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

குருநகர் பாடும் மீன் விளையாட்டு கழகம் 'ஏ' அணிக்கும் இளவாலை யங்ஹென்றீஸ் அணிக்குமிடையில் பாடும் மீன்கழக மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் யங்ஹென்றீஸ் அணி 2-0 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு ஏ அகஸ்ரின நடுவராக கடமையாற்றினர்.

## பார்சிலோனு ஒலிம்பிக் நாடுகள் பெற்ற பதக்கங்கள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இணைந்த சோவியத் | 6 | 2 | — |
| சீனு | 5 | 6 | 1 |
| ஐக்கிய அமெரிக்கா | 3 | 2 | 5 |
| டல்கேரியா | 1 | 1 | — |
| ஹங்கேரி | 2 | 1 | 1 |
| ஜெர்மனி | 1 | 1 | 2 |
| அவுஸ்திரேலியா | 1 | 1 | 1 |
| தென்கொரியா | 2 | — | — |
| ஸ்பெயின் | 1 | 1 | 1 |
| யப்பான், | 1 | — | — |
| பிரான்ஸ் | — | 2 | 1 |
| சுவீடன் | — | 1 | 1 |
| இத்தாலி | — | 1 | 2 |

யூகோஸ்லாவியா, நெதர்லாந்து. பின்லாந்து ருமேனியா, மங்கோலியா தலா ஒரு வெண்கலம்.

# இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாரை பதவிநீக்குமாறு 36 உறுப்பினர்கள் கோரிக்கை

[புதுடில்லி]

இந்திய பாதுகாப்பமைச்சர் சரத்பவார் மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்கப்படவேண்டும் என பாரதிய ஜனதாக்கட்சி மற்றும் ஜனதாதள் கட்சியை சேர்ந்த 36 உறுப்பினர்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

திரு சரத்பவார் மகாராஷ்டிராவின் முதலமைச்சராக இருந்த காலப்பகுதியில் பொதுமக்களுக்கு வீடுகள் ஒதுக்கும் விடயத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக பம்பாய் உயர் நீதிமன்றம் அண்மையில் கண்டன உத்தரவுகள் வழங்கியதையடுத்தே மேற்படி கோரிக்கை பாரதிய மற்றும் ஜனதாதள் கட்சி உறுப்பினர்களால் விடுக்கப்பட்டதாக கூறப்படுகிறது. (க)

## ஈழ அகதிகள் விவகாரம்: இந்தியா-ஐ. நா. கமிஷன் உடன்பாடு ஒப்பந்தம்

(ஜெனிவா)

தமிழகத்தில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளின் வெளியேற்றம் தொடர்பாக இந்திய அரசும் - ஐ. நா. கமிஷனும் உடன்பாடு ஒன்றில் கைச்சாத்திடவுள்ளன

தமிழ் அகதிகள் சுயவிருப்பின் பேரில் நாடு திரும்புகிறார்களா அல்லது பலவந்தத்தின் மத்தியில் அனுப்பப்படுகிறார்களா என அகதிகளுக்கான ஐ நா. உயர் ஸ்தானிகராலயம் திடீரென எவ்வித ஏற்பாடுகளும் முன்னறிவித்தலுமின்றி சோதனைகளை நடாத்தும்.

இத்திடீர் சோதனைக்கு இடமளிக்கும் வகையிலேயே ஜெனிவாவில் இந்தியாவுக்கும் மேற்படி அமைப்புக்குமிடையில் உடன்பாடொன்று கைச்சாத்திடப்படவுள்ளது. (சி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். புனித மரியாள் வித்தியாலய சாரணருக்கான சின்னம்சூட்டும் வைபவம் இன்று புதன்கிழமை காலை 9-00 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. சி தார்சீசியஸ் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. இ. மகேந்திரன் கலந்துகொள்வார்.

## தமிழக மாநில அரசு மீது வாழப்பாடி குற்றச்சாட்டு

[சென்னை]

விடுதலைப்புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டபின் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து தமிழக அரசு அசமந்தப்போக்கை கடைப்பிடித்து வருவதாக தமிழக இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தமிழக அரசின் இவ் அசமந்தப்போக்கை அவ்இயக்கத்தின் ஆதரவாளர்கள் தவறுகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

## சாராயவிலை அதிகரிப்பு

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்ட இலங்கை வடிசாலைக் கம்பனியின் சகலரக சாராயத்தின் விலையையும் 10 ரூபா முதல் 20 ரூபாவரை விலை அதிகரிப்பு செய்துள்ளது.

நேற்று முன்தினம் முதல் இவ்விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் 1ம் திகதி முதல் நடைபெறவிருக்கும் க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்குரிய, பணிப்புக்குழுவினருக்கான அறிவுறுத்தல் கூட்டம், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை 31ம் திகதி காலை யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## நல்லூர் உற்சவ காலத்தில் இணைந்து பணியாற்ற காவல்துறை அழைப்பு

[யாழ்ப்பாணம்]

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவ காலத்தின் போது தமிழீழக் காவல்துறையுடன் இணைந்து பணியாற்ற விரும்புபவர்களைத் தமிழீழக் காவல்துறைத் தலைமைச்செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் கேட்டுள்ளார்.

உற்சவ காலத்தின்போது, பொதுமக்களின் அசௌகரியங்களையும், பிரச்னைகளையும் தீர்த்து உதவும் பொருட்டு, தமிழீழக் காவல்துறையினருடன் இணைந்து செயலாற்ற விரும்பும் அரச, தனியார் துறை இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக சேவையில் ஈடுபாடுள்ள பெரியோர்கள் ஆகியோருக்கு இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## வழிப்பறிக் கொள்ளை கொழும்பில் அதிகரிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் வழிப்பறிக் கொள்ளைகள் நாளுக்குநாள் கொழும்பில் அதிகரித்து வருகின்றன.

கொட்டாஞ்சேனை, முகத்துவாரம், பாலத்துறைப் பகுதிகளில் இந்த வழிப்பறிக் கொள்ளைகள், இரவிலும், பகலிலும் மிகவும் சாதுரியமாக நடைபெற்று வருகின்றன.

தமிழில் நன்கு உரையாடக்கூடிய கும்பலொன்று, திடீரென ஓட்டோக்களில் வந்து, தம்மை இரகசியப் பொலிஸார் எனக் கூறிக்கொண்டு சோதனை செய்யும் பாணியில் பணம், நகைகளைக் கொள்ளையடித்துக்கொண்டு தலைமறைவாகி விடுகின்றனராம்.

இரவு நேரங்களில் தமிழர் நெருக்கமாகக் குடியிருக்கும் பகுதிகளுக்கு, இராணுவம், பொலிஸ், சுங்கப் பகுதியினர் போன்று சீருடைகள் அணிந்து வீடுகளைச் சோதனை செய்வதாகக் கூறி, விலை உயர்ந்த பொருட்கள், பணம், நகைகள் என்பனவற்றைக் கொள்ளையடித்துச் செல்கின்றனராம்.

இச்சம்பவங்களினால் மேற்படி பகுதிகளில் இரவு 10-00 மணிக்குப் பின்னர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுபவர்களைப் பொலிஸார் கைதுசெய்து வருவதாகவும் கூறப்படுகின்றது. [வி]

## பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் அரச அதிபர் மேற்படி வேண்டுகோளை ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் மூலம் கடந்த வாரம் கொழும்பில் விடுத்திருந்தார்.

இவ்வேண்டுகோள் உடனடியாக ஜனாதிபதியின் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமென்று பிரட்மன் வீரக்கோன் தமக்கு வாக்குறுதியளித்துள்ளார் என்று தான் கொழும்பிலிருந்த நாட்களில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை சந்தித்து யாழ். மக்களின் தற்போதைய நிலை பற்றி கூறுவதற்கு முனைந்த போதும் அதற்கு எதுவித சந்தர்ப்பமும் கிடைக்கவில்லை என்றும் யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார் (வி)

## விணுத்தாள்கள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ருக்கு வந்து சேர்ந்த கல்விப் பணிப்பாளர் திரு. ஆர் சுந்தரலிங்கம் 12 நாட்களுக்குரிய விணுத்தாள்களை தம்முடன் எடுத்து வந்துள்ளார்.

2-ம் கட்ட விணுத்தாள்கள் அடுத்த மாதம் 6-ம் திகதியும் 3-ம் கட்ட விணுத்தாள்கள் 15-ம் திகதியும் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

இதேவேளை 1991-ம் ஆண்டுக்குரிய யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற க. பொ. த (உ/த) விசேட பரீட்சைக்குரிய முடிவுகள் வெளிவரவில்லை.

மேற்படி பரீட்சை முடிவுகள் அடுத்தமாதம் 1-ம் திகதி ஆரம்பமாக இருக்கும் க. பொ. த (உ/த) பரீட்சைகள் முடிவடைந்த பின்பே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (57)

## காப்புறுதித் திட்டத்தில் வடபகுதி விவசாயிகள்

[யாழ்ப்பாணம்]

வடபகுதி விவசாயிகள் மீண்டும் காப்புறுதித் திட்டத்தில் இணைக்கப்பட உள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில அரசாங்க அதிபர் பிரிவுகள் தவிர்ந்த மற்றைய உதவி அரச அதிபர் பிரிவுகளிலுள்ள விவசாயிகள் அனைவரையும் உடனடியாகக் காப்புறுதித் திட்டத்தில் இணைப்பதற்குக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

காப்புறுதித் திட்டத்தில் விவசாயிகள் இணைக்கப்பட்டதும், இவர்கள் விவசாயத்துக்கு வேண்டிய கடன்களை வங்கிகளிலிருந்து பெறமுடியுமென்றும் கூறப்படுகிறது. (வி)

## இரு தடவைகள்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தேசிய அடையாள அட்டைகள், தபால்கள் மண்ணெண்ணை உட்பட பல உணவுப் பொருட்களும் வரவிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார். (வி)

## இராணுவத்தினர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாண்டியடி கொட்டியாலை, காஞ்சிரம்குடா ஆகிய பகுதிகளைச் சுற்றி வளைத்த இராணுவத்தினர் பொதுமக்கள் மீது சரமாரியாகச் சுடத்தொடங்கினர்கள்.

படையினருக்கு உதவியாக ஹெலி கொப்டரிலிருந்து 50 ஹலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

முனைக்காட்டைச் சேர்ந்த வ. பத்மன் என்பவரே இச் சம்பவத்தில் சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இதே இடத்தைச்சேர்ந்த பொ. ஆனந்தன் 28 வயது தி. ரவி (27) பாலிப்போடி (25) ஆகியோர் இச்சம்பவத்தில் காயமடைந்தவர்களாவார்கள். (ர)

## வீரச்சாவு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு தாளங்குடா பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5 மணியளவில் ஸ்ரீலங்காப்படையினர் மேற்கொண்ட தாக்குதலொன்றில் விடுதலைப்புலிகளின் முழுநேர ஆதரவாளர் ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

கணபதிப்பிள்ளை ஜெயசீலன் (மட்டக்களப்பு கிரான்குளம்) என்பவரே வீரச்சாவைத்தழுவிக் கொண்டவராவர். [க]

0 0 0

(யாழ்ப்பாணம்)

பழுகாமம் பெரிய போரத்தீவுக இடையில் அமைந்திருந்த இராணுவ காவலரண் மீது புலிகள் நடத்திய தாக்குதலின் போது சளைக்காது போராடி 2-ம் லெப். சண்முகம் (அச்சுதன் மாணிக்கம் நித்தியானந்தன் வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு புலிகள்தமதுவீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## இந்தியா வெற்றி

(ஸ்பெயின்)

பார்ஸிலோனு ஒலிம்பிக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஹொக்கி ஆட்டத்தில், இந்தியா ஆர்ஜன்ரீனவை 1-0 கோலால் வெற்றி பெற்றது.

நாளைய போட்டியில், இந்தியா இங்கிலாந்தை எதிர்த்துப் போட்டியிடும்.

முதலாவது போட்டியில், இந்தியா ஜெர்மனியிடம் தோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

## அரசு புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையை உடனடியாக ஆரம்பிக்கவேண்டுமென 'ரெலோ' இயக்கம் விடுத்த வேண்டுகோளுக்கு பலத்த எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்துள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஸ்ரப் இம் முயற்சி தமிழ்-முஸ்லிம் உறவைத் தீவிரமாகப் பாதிக்குமெனவும் கூறியுள்ளார்.

இது குறித்து அஸ்ரப் வெளியிட்ட அறிக்கையில், புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு 'ரெலோ' கேட்டிருப்பது முஸ்லிம் காங்கிரசை குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது என்றும் கூறியுள்ளார். [சி]

## மண்ணெண்ணை விநியோகம்

(மானிப்பாய்)

மானிப்பாய் ப நோ. கூ. சங்க கிளைகளில் லீற்றர் 25 ரூபா வீதம் அரை லீற்றர் மண்ணெண்ணை ஒவ்வொரு குடும்பத்துக்கும் தற்பொழுது விநியோகிக்கப்படுகின்றது. (71)

## 120 போலி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பற்சிகிச்சை வைத்தியர் சங்கம் தெரிவித்த புகாரினை அடுத்தே போலி வைத்தியர்கள் கண்டு பிடிக்கப்பட்டனராம். (சி)

## அநுரா

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த ஞாயிற்றுக்கிழமை நித்தம்புவயில் நடைபெற்ற கூட்டத்திலேயே இக்கோஷ்டி மோதல் இடம்பெற்றது.

அதிகாரப் போட்டியால் நடந்ததாக கூறப்படும் இக்கோஷ்டி மோதலில் சிலர் காயமடைந்ததாகவும் கூறப்படுகிறது. [சி]

## எழுதுவினைஞர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்தால், அவை அனைத்தும் ஒன்றுதிரட்டப்பட்டு உடனடியாக கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படுமென்று, தெரிவிக்கப்படுகிறது. (வி)

## யாழ்.திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலைப் பகுதியிலும் நேற்று புலிகள் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ் இரு தாக்குதல்களிலும் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி உடனடியாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (மா-ரி)

## தாயகம்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறார்களா என்பதனை ஆராய விசாரணைக்குழு ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை நியமித்துள்ளது.

தமிழ் அகதிகள் இலங்கை திரும்பும் சமயத்தில் இக்குழு திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்ட காலகட்டத்தில் வலுக்கட்டாயமாக தமிழ் அகதிகள் இலங்கைக்கு அனுப்பப்பட்டதனை பலசர்வதேச அமைப்புகள் வன்மையாக கண்டித்துள்ளன.

அமெரிக்கா மற்றும் நோர்வேயிலுள்ள மனிதஉரிமைகள் அமைப்புக்களே மேற்படி கண்டனத்தை இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளிடம் வன்மையாகத் தெரிவித்துள்ளன. [க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 29ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8